Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.
Case No. C.C.No. 101/2024

Deposition of witness for Prosecution – P.W.6 Date : 30.01.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ஞானசேகரன் | Village : | புஞ்சை புளியம்பட்டி |
| Father's Name : | மணி | Taluk : | சத்தியமங்கலம் |
| Age : | 48 | District : | ஈரோடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of January 2026 **(Accused Present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான்கோவை மாவட்டம் கோவில் பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த சமயத்தில் கடந்த 06.04.2024- ஆம் தேதி நிலைய தலைமை காவலர் செந்தில்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது சுந்தரசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று நிலைய குற்ற எண். 203/2024 சட்டப்பிரிவு 279, 337 IPC-ன் கீழ் ஒரு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்றாவணம் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) இந்த வழக்கின் முதல் நிலை விசாரணையினை காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வநாயகம் எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் கார்திகேயன் மற்றும் உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அரசு தரப்பு சான்றாவணங்கள் 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) பின்னர் விபத்தில் காயமடைந்த சிலம்பாத்தாள் என்பவர் அன்றைய தினமே காலை 06.00 மணிக்கு இறந்து விட்டதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 இதச-ல் இருந்து 279, 304-A ஆக பிரிவு மாற்றம் செய்யப்பட்டு சட்டப்பிரிவு மாறுதலறிக்கை தயார் செய்துள்ளார்.(**அந்த சட்டப்பிரிவு மாறுதலறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் என் பார்வைக்கு வைத்த இந்த வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்து போன சிலம்பாத்தாள் என்பவரது பிரேதத்தின் மீது கோவை அரசு மருத்துவமனை சவக்கிடங்கின் முன்பு வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். (**அந்த பிரேத விசாரணை அறிக்கை அரசு தரப்பு சான்றாவணம் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேலும் அவர் பிரேதத்தை சடல கூராய்விற்கு அனுப்பி வைத்து,இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் அனைவரையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 08.04.2024-ம் தேதி நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து தக்கப்பிணையில் விடுவித்தேன். அன்றைய தினமே விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனம் TN 38 BE 4579 - மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். மோட்டார் வாகன ஆய்வாளர் வேலுமணி என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அரசு தரப்பு சான்றாவணம் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) பின்னர் கோவை அரசு

மருத்துவமனை மருத்துவர் கலாவதி பிரபாகர் என்பவரை விசாரித்து இறந்து போன சிலம்பாத்தாள் என்பவருக்கான பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (**அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அரசு தரப்பு சான்றாவணம் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்து, எனது புலன் விசாரணை முடிந்து எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

(எதிரி ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்த போதும் அவர் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.)

Sd/-V.Monika
District Munsif Cum Judicial Magistrate,
Annur.

| |
|---|
| Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct. |